Melody adapted by W. Havergal, 1793-1870

Winchester New
L.M.



பாமாலை 484 ஆதித் திருவார்த்தை

1 ஆதித் திருவார்த்தை வரும்
அற்புத செய்தியைத் தரும்
முன்னோடியைப் புகழுங்கள்
முன் ஜோதி என்றழையுங்கள்.

2 தூதன் காபிரியேல் வந்து
யோவான் என்று பெயர் தந்து
தீர்க்கதரிசனம் சொன்னான்
யோவானின் புகழ் கூறினான்.

3 தாயின் வயிற்றில் இருந்து
சாட்சியளித்தார் மகிழ்ந்து
பூலோக ஒளி தோன்றிட
முன்னதை அதைக் கூறிட

4 பெண்களிடத்தில் பிறந்த
மானிடர்களில் சிறந்த
தீர்க்கன் எவரும் இல்லையே
யோவானைப் போல உண்மையே

5 பிதா சுதன் தூய ஆவி
திரியேகரை என்றும் மேவி
சதா காலமும் மகிமை
ஏறெடுப்போம் ஆராதனை.